*தலைப்புச் செய்திகள்*

- தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கானதொகுதிப் பங்கீட்டை இறுதிப்படுத்தும் முயற்சியில் அரசியல் கட்சிகள் தீவிரமாகஈடுபட்டுள்ளன.
- மத்தியஅரசுதமிழகத்திற்குகூடுதல் நிதியுதவியும், கூடுதலாகதிட்டங்களையும் வழங்கியுள்ளதாகபிஜேபிதமிழகதேர்தல் பொறுப்பாளர் திருசி டி ரவிதெரிவித்துள்ளார்.
- திமுக—காங்கிரஸ் தொகுதிப் பங்கீடுபேச்சுவார்த்தைஓரிருநாளில் முடிவடையும் என்றுதமிழ்நாடுகாங்கிரஸ் கமிட்டித் தலைவர் திருகே எஸ் அழகிரிதெரிவித்துள்ளார்.
- கோவிட் - 19 தடுப்பூசிசெலுத்தப்படுவதால்அந்நோய்த் தொற்று பரவுவதுதடுக்கப்படும் என்றுமத்தியஅரசுதெரிவித்துள்ளது.
- இந்தியா—ஜெர்மனி இடையிலான இரண்டாவதுஆடவர் ஹாக்கிப் போட்டி 1-1 என்றகோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இனிவிரிவானசெய்திகள்

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கானவேட்பு மனுதாக்கல் அடுத்தவாரம் தொடங்க உள்ளநிலையில், கூட்டணியில் தொகுதிப் பங்கீட்டை இறுதிப்படுத்தும் முயற்சியில் கட்சிகள் தீவிரமாகஈடுபட்டுள்ளன.

அஇஅதிமுகதலைமையிலானகூட்டணியில் தொகுதிப் பங்கீடுதொடர்பாகஅக்கட்சிபிஜேபி, தேமுதிகஉள்ளிட்டகட்சிகளுடன் பேச்சுநடத்திவருகிறது.

திமுகதலைமையிலானகூட்டணியில் அக்கட்சிகாங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியகம்யூனிஸ்ட், மதிமுகஉள்ளிட்டகட்சிகளுடன் தொடர்ந்துபேச்சுநடத்திவருகிறது.

திமுக—காங்கிரஸ் இடையிலானதொகுதிப் பங்கீடுபேச்சுவார்த்தைஓரிருநாளில் முடிவடையும் என்றுதமிழ்நாடுகாங்கிரஸ் கமிட்டித் தலைவர் திருகே எஸ் அழகிரிதெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர், பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், இரண்டுநாட்களில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்றும் கூறினார்.

<><><><><>

மத்தியஅரசுதமிழகத்திற்குகூடுதல் நிதியுதவியும், கூடுதலாகதிட்டங்களையும் வழங்கியுள்ளதாகபிஜேபிதமிழகதேர்தல் பொறுப்பாளர் திருசி டி ரவிதெரிவித்துள்ளார்.

ஓசூரில் நேற்றுநடைபெற்றதேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசியஅவர், 11 பொலிவுறு நகரத் திட்டம் தமிழகத்திற்குவழங்கப்பட்டதாகக் கூறினார்.

தமிழகத்தில் மெட்ரோரயில் திட்டத்திற்கு 63 கோடி ரூபாய் நிதியையும் மத்தியஅரசுவழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகசட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபியில் இடம் பிடித்துள்ளஅஇஅதிமுககூட்டணிவெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கைதெரிவித்தார்.

<><><><><>

காங்கிரஸ் கட்சிபல்வேறுமாநிலங்களில் பல்வேறுஅரசியல் கட்சிகளுடன் புனிதமற்றகூட்டணிவைத்துள்ளதாகபிஜேபிகுற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசியஅக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் திருசம்பித் பத்ரா, கட்சியைநிலைநிறுத்திக் கொள்ளகூட்டணிக் கட்சிகளைநம்பியிருக்கும் நிலைஅக்கட்சிக்குஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

பிஜேபி-யைபொறுத்தவரைவளர்ச்சியைநோக்கமாகக் கொண்டஅரசியலைநம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

<><><><><>

சாதிவாரிகணக்கெடுப்பு நடத்தாதசூழலில் உள்ஒதுக்கீடுவழங்கினால் அதுசட்டப்படிசெல்லாததாகிவிடும் என்று விடுதலைசிறுத்தைகள் கட்சித் தலைவர் திருதொல் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்துஅவர் விடுத்துள்ளஅறிக்கையில், உள்ஒதுக்கீடுவழங்குவதற்குமாநிலஅரசுக்குஅதிகாரம் இருந்தாலும், மக்கள் தொகைதொடர்பான முழு தரவுகளின் அடிப்படையிலேயேஅதைக் கொடுக்க முடியும் என்றுகூறியுள்ளார்.

<><><><><>

கோவைமாவட்டத்தில் கடந்ததேர்தலைவிடகூடுதலாகஆயிரத்து 85 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகமாவட்டதேர்தல் அதிகாரிதிருராசாமணிதெரிவித்துள்ளார்.

மாவட்டஆட்சியர் அலுவலகத்தில் நேற்றுசெய்தியாளர்களிடம் பேசியஅவர், ஆயிரத்து 50 வாக்காளர்களுக்குஒருவாக்குச்சாவடிவீதம் நான்காயிரத்து 467 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதுஎன்றும், இதில் 788 வாக்குச்சாவடிகள் பதற்றமானவைஎன்றும் கூறினார்.

மாவட்டத்தில் 80 வயதுக்குமேற்பட்ட 64 ஆயிரத்து 650 பேருக்கும், 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டமாற்றுத்திறனாளிகளுக்கும் தபால் வாக்குஅளிக்கஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பாகமாவட்டகட்டுப்பாட்டுஅறைக்குநேற்றுவரை 85 புகார்கள் வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<><><><><>

சட்டப்பேரவைத் தேர்தலைமுன்னிட்டுதிருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் துணைராணுவப் படையினர், காவல்துறையினர் பங்கேற்றஅணிவகுப்பு நேற்றுநடைபெற்றது.

<><><><><>

புதிதாகவாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கசிறப்பு சுருக்கமுறைதிருத்தத்தின்போதுபெயர் வழங்கியவாக்காளர்கள், மின்னணுவாக்காளர் அடையாளஅட்டையினைபதிவிறக்கம் செய்துகொள்ளஏதுவாகஅனைத்துவாக்குச்சாவடிகளிலும் இம்மாதம் 13 மற்றும் 14-ம் தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறஉள்ளது.

வாக்காளர் பட்டியலில் முதல்முறையாகபெயர் சேர்க்கப்பட்டவாக்காளர்கள் இந்தமுகாமினைபயன்படுத்தி தங்களதுமின்னணுவாக்காளர் அடையாளஅட்டையினைசெல்பேசிஅல்லதுகணினியில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறுதமிழ்நாடுதலைமைத் தேர்தல் அதிகாரிதிருசத்யபிரதாசாஹூ கேட்டுக் கொண்டுள்ளார்.

<><><><><>

தமிழகம் முழுவதும் நீர்நிலைகளைபாதுகாக்கும் வகையில் அவற்றின் செயற்கைக்கோள் புகைப்படங்களைஎடுத்துவலைதளங்களில் பதிவேற்றம் செய்யவேண்டுமென்றுஅனைத்துமாவட்டஆட்சியர்களுக்கும் சென்னைஉயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஈரோடுமாவட்டத்தில் பெரும்பள்ளஓடையின் இருபுறமும் சுவர் எழுப்பதடைவிதிக்கக் கோரிதாக்கல் செய்யப்பட்டமனுவைவிசாரித்ததலைமைநீதிபதிதிரு சஞ்சீப் பானர்ஜி தலைமையிலானஅமர்வு, செயற்கைக்கோள் புகைப்படங்களின் தொகுப்பைதலைமைச் செயலருக்கும். உயர்நீதிமன்றதலைமைப் பதிவாளருக்கும் அனுப்பிவைக்கவேண்டுமென்றுஉத்தரவிட்டது.

நீர்வழிப்பாதையில் குறுக்கீடுசெய்யும் வகையில் கட்டுமானங்களைமேற்கொள்ளக் கூடாதுஎன்றும், நீரோட்டத்திற்குதடைஏற்படுத்தும் கட்டுமானங்களைஅகற்றவேண்டுமென்றும் அந்தஅமர்வு உத்தரவிட்டது.

<><><><><>

நாடுமுழுவதும் தொடங்கப்பட்டுள்ள மூன்றாவதுமுன்னுரிமைபிரிவினருக்கானகோவிட் - 19 தடுப்பூசிசெலுத்தும் பணியால் அந்நோய்த் தொற்று பரவுவதுதடுக்கப்படும் என்றுநித்திஆயோக் உறுப்பினர் திருவிகேபால் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிபோட்டுக் கொள்பவர்கள் இரண்டுதவணைஊசிகளையும் குறிப்பிட்டகாலத்திற்குள் போட்டுக் கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சிலமாநிலங்களில் கோவிட் - 19 தொற்றுசற்றுஅதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் கோவிட் - 19 தொற்றுக்குஎதிரானவழிகாட்டுநெறிமுறைகளைகண்டிப்பாகபின்பற்றவேண்டுமென்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் இந்நோய்த் தொற்றால் உயிரிழப்போர் விகிதம் மிகக் குறைவாக இருப்பதுதிருப்தியளிக்கக்கூடியதுஎன்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாகசெய்தியாளர்களிடம் பேசியமத்தியசுகாதாரத்துறைசெயலர் திருராஜேஷ் பூஷண், தற்போதுநாடுமுழுவதும் கோவிட் -19 தொற்றால் பாதிக்கப்பட்டோர் விகிதம் ஒன்று புள்ளிஐந்துஒன்றுசதவீதம் என்றும், இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் 97 சதவீதத்திற்கும் அதிகமானோர் குணமடைந்துவிட்டதகாவும் கூறினார்.

மஹாராஷ்ட்ரா, தமிழகம், பஞ்சாப், குஜராத் மாநிலங்களில் கடந்த இரண்டுவாரங்களில் கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்படுவோர் சற்றுஅதிகரித்துள்ளதாகவும், அதைக் கட்டுப்படுத்தமாநிலஅரசுகளுக்குஉதவமத்தியகுழுக்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<><><><><>

*இருவரிச்செய்திகள்*

ஹவ்திகிளர்ச்சியாளர்கள் அனுப்பியட்ரோனைசவுதிஅரேபியாதலைமையிலானகூட்டுப்படைகள் சுட்டுவீழ்த்தின.

<><><><><>

புதுமையானகண்டுபிடிப்புகளில் உருவாக்கப்படும் சாதனங்கள் குறைந்தவிலையில் மக்களுக்குகிடைப்பதுஅவசியம் என்றுமத்தியதொழில்துறைஅமைச்சர் திருபியூஷ் கோயல் கூறியுள்ளார்.

<><><><><>

கடந்த இரண்டுநாட்களாகநடைபெற்றநான்கு ஜி அலைக்கற்றைஏலத்தில் அரசுக்கு 77 ஆயிரத்து 814 கோடி ரூபாய் கிடைத்துள்ளது.

<><><><><>

நீலகிரிமாவட்டம் குன்னூர் அருகேஉள்ளஎமகுண்டுகாலனிப் பகுதியில் நடமாடும் கருஞ்சிறுத்தையைப் பிடிக்கவனத்துறையினர் திட்டமிட்டுள்ளனர்.

<><><><><>

நாகைமாவட்டம் கோடியக்கரைக்குதென்கிழக்கேநடுக்கடலில் படகிலிருந்துவிழுந்துதத்தளித்தமீனவர் ஒருவரை இந்தியகடலோரக் காவல் படை, இலங்கைகடற்படைஉதவியுடன் மீட்டது.

<><><><><>

*விளையாட்டுச்செய்திகள்*

இந்தியா—ஜெர்மனி இடையிலான இரண்டாவதுஆடவர் ஹாக்கிப் போட்டி 1-1 என்றகோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்தியாவின் ஜர்மென்ப்ரீத் சிங் முதல் கோலைஅடித்தார். சிறிதுநேரம் கழித்துஜெர்மனிபெனால்டிகார்னர் வாய்ப்பைகோலாகமாற்றிசமன் செய்தது.

நான்குபோட்டிகளைக் கொண்டதொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமைநடைபெற்றஆட்டத்தில் ஹ்ரீஜேஷ் தலைமையிலான இந்தியஅணி 6 -1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றதுகுறிப்பிடத்தக்கது.

முன்னதாக, மகளிர் பிரிவில் இந்தியாஜெர்மனியிடம் 2 – 0 என்றகோல் கணக்கில் தோற்றுப் போனது.

<><><><><>

ஸ்விஸ் ஓபன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அஸ்வினிபொன்னப்பா–சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி இணைமுதல் சுற்றில் வெற்றிபெற்று இரண்டாம் சுற்றுக்குமுன்னேறியுள்ளது.

இந்த இணைமுப்பத்துஎட்டேநிமிடங்களில் இந்தோனேஷிய இணையை 21-18, 21-18 என்றசெட் கணக்கில் வென்றது.

அதேநேரத்தில் பிரணவ் - சிக்கிரெட்டி இணைதோற்றுப் போனது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் இன்றுநடைபெறும் ஆட்டத்தில் இந்தியவீரர் கிடாம்பி ஸ்ரீகாந்த், மற்றொரு இந்தியவீரர் சமீர் வர்மாவைஎதிர் கொள்கிறார்.

ஹெச் எஸ் பிரணாய் - நெதர்லாந்துவீரர் **Mark caljouw -** வை எதிர்கொள்கிறார்.

சவ்ரவ் வர்மா–சுவிட்சர்லாந்துவீரர் **ChristinanKirchmayr** - ஐயும், அஜய் ஜெய்ராம் - தாய்லாந்தின் **Thammasin –** யும் எதிர்கொள்கின்றனர்.

மகளிர் பிரிவில் பிவிசிந்து–துருக்கியின் **NeslihanYigit**–யையும், சாய்னாநேவால் - தாய்லாந்தின் **Chaiwan** –ஐயும் சந்திக்கின்றனர்.

<><><><><>

ஜம்மு கஷ்மீரில் நேற்றுநிறைவடைந்தகேலோ இந்தியாகுளிர்காலப் போட்டியில் ஜம்மு கஷ்மீர் 11 தங்கம், 18 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

<><><><><>

எகிப்துதலைநகர் கெய்ரோவில் நடைபெறும் உலகக்கோப்பைக்கானதுப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியவீராங்கனை மனிஷாகீர் ட்ராப் பிரிவில் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

<><><><>